## சுருக்கம்

பணியமைப்பு – நகர் ஊரமைப்புத் துறை – திருமதி.ஆ. ஜெயலட்சுமி, தட்டச்சர் – கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (ந.வ2(2)) துறை

அரசாணை (3டி) எண்.92

நாள் :27.02.2020
விகாரி வருடம், மாசி – 15
திருவள்ளுவர் ஆண்டு 2051.

படிக்கப்பட்டது:

1. அரசாணை(நிலை)எண்.100, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018.
2. நகர் ஊரமைப்பு இயக்குநர் கடித ந.க.எண். 14492/2017/ஜே1, நாள் 12.12.2019.

* * * * * *

**ஆணை**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகர் ஊரமைப்பு துறையின் சேலம் மண்டல அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த திரு. த. மணிவேல், அளவர்/உதவி வரைவாளர் 30.11.2014 அன்று பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து அன்னாருடைய மனைவி திருமதி. ஆ. ஜெயலட்சுமி என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக தட்டச்சராக நகர் ஊரமைப்பு துறையில் பணி நியமனம் செய்யப்பட்டு 19.02.2018 முற்பகல் முதல் பணிபுரிந்து வருவதாகவும் அவர் பணியில் சேர்ந்த நாளான 19.02.2018 முற்பகல் முதல் அப்பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறு நகர் ஊரமைப்பு இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நேர்வில், நகர் ஊரமைப்புத் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து தற்காலிக தட்டச்சராக தமிழ்நாடு அமைச்சுப்பணியில் நகர் ஊரமைப்பு துறையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.ஆ.ஜெயலட்சுமி அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 19.02.2018 முற்பகல்

..2..

முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவரது பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதி உடையவராகிறார்.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண்.25238/க்யூ2/19-1, நாள் 18.02.2020 மற்றும் பணியாளர் (ம) நிருவாக சீர்திருத்தத் துறையின் அ.சா..எண்.6496/ஜி2/2020, நாள் 21.02.2020-இல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ராஜேஷ் லக்கானி
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை-2.
(அசல் சான்றிதழ்கள் (ம) பணிப்பதிவேடுகளுடன்)
திருமதி.ஆ. ஜெயலட்சுமி, தட்டச்சர்,
(நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை-2 வழியாக)
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ-2) துறை, சென்னை-9.
பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்(ஜி) துறை, சென்னை-9.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (அநமு-1) துறை, சென்னை-9.
மாநில கணக்காயர், சென்னை-18.
இருப்புகோப்பு/உதிரிநகல்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

27/2/2020
பிரிவு அலுவலா.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அலுவலகம்,
திருப்பூர் மண்டலம்.

ந.க.ந.க. எண் : 323/19-2 நாள் : 06.2020

அசல் சார்பு செய்யப்படுகிறது.

பெறுநர்:
திருமதி. ஆ. ஜெயலட்சுமி-தட்டச்சர்
திருப்பூர் மண்டலம்

Assistant Director of
Town and Country Planning
Tiruppur Region
Tiruppur - 641 601.

06/06/2020
06/06/2020